# இரண்டாம் பருவத் தேர்வு - 2025

வகுப்பு : **6** தமிழ்

காலம் : **2.00மணி** மதிப்பெண்கள் : **60**

**I. சரியான விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக.** 6x1=6

1. பிறரிடம் நான்__________பேசுவேன்.
   அ) கடுஞ்சொல் ஆ) இன்சொல் இ) வன்சொல் ஈ) கொடுஞ்சொல்
2. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல்_________
   அ) மறைந்த ஆ) நிறைந்த இ) குறைந்த ஈ) தோன்றிய
3. கதிர்முற்றியதும்__________செய்வர்.
   அ) அறுவடை ஆ) உரமிடுதல் இ) நடவு ஈ) கலையெடுத்தல்
4. நிலையான செல்வம்__________
   அ) தங்கம் ஆ )பணம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்
5. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர்.
   அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி
6. போர்க்களத்தில் வெளிப்படும் குணம்__________
   அ) மகிழ்ச்சி ஆ) துன்பம் இ) வீரம் ஈ) அழுகை

**II. சேர்த்து எழுதுக:** 4X1=4

7. இவை + எட்டும் =
8. பயன்+ இலா =
9. அடிக்கும் + அலை =
10. பண்டம் + மாற்று =

**III. பிரித்து எழுதுக:** 4X1=4

11. பொருளுடைமை =
12. போகிப் பண்டிகை=
13. மின்னணு =
14. நானிலம் =

**IV. பொருத்துக:** 4X1=4

15. விடிவெள்ளி - பஞ்சு மெத்தை
16. மணல் - ஊஞ்சல்
17. புயல் - போர்வை
18. பனிமூட்டம் - விளக்கு

**V. ஓரிரு வார்த்தையில் விடையளி:( எவையேனும் ஆறு மட்டும்)** 6X2=12

19. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?
20. கண்மணியே கண்ணுறங்கு பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

21. மொழிக்கு இறுதியில் வாரா மெய்யெழுத்துக்கள் யாவை?
22. ஆக்கம் யாரிடம் வழி கேட்டுச் செல்லும்?
23. நான்கு நிலங்கள் என்பன யாவை?
24. அலையையும் மேகத்தையும் மீனவர்கள் என்னவாகக் கருதுகின்றனர்?
25. சிறு வணிகப் பொருட்கள் யாவை?
26. போகிப் பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?

**VI. ஒரிரு வரிகளில் விடையளி:( எவையேனும் மூன்று மட்டும்)** 3X3=9

27. ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துக்கள் யாவை?
28 தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?
29. பழந்தமிழர் ஏற்றுமதி இறக்குமதி செய்த பொருட்கள் யாவை?
30. நீங்கள் வசிக்கும் பகுதியில் நடைபெறும் தொழில்களில் ஒன்றைப் பற்றி ஐந்து வரிகள் எழுதுக?
31. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?

**VII. அடி மாறாமல் எழுதுக:** 2

32. "சொல்லுக" எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**VIII. கடிதம் எழுதுக:** 7

33. பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றதற்குப் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

**IX. கட்டுரை எழுதுக:** 7

34. அ) உழைப்பே மூலதனம் கதையை சுருக்கி எழுதுக.

*(அல்லது)*

ஆ)பொங்கல் திருநாள் பற்றி கட்டுரை எழுதுக.

**X. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 5X1=5

35. கீழ்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக
    அ) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.
    ஆ) அது ஒரு இனிய பாடல்.
36. பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக:
    அ) தெண்றல்
    ஆ) நன்ரி
37. கீழே உள்ள சொற்களைச் சேர்த்துப் புதிய சொற்களை உருவாக்கு.
    அ) பல் → { உண்டு
    ஆ)மண் → { இல்லை
38. படிப்போம் பயன்படுத்துவோம்.
    அ) Harvest ஆ) Consumer

39) சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) ஏற்றுமதி ஆ) பொங்கல்

*6-HSC TAM -2*

www.freetnbooks.com | FREETNBOOKS